# MANOHARI.

DRAMA IN TAMIL.

# மனோஹரி

இனிய செந்தமிழ் நாடகம்.

(முதற்பாகம்)

இஃது
முத்தமிழ் விநோதகான சபா
நாடக ஆசிரியர்
நெல்லை-T. S. சிவராமலிங்கம்பிள்ளை,
அவர்களால்
இயற்றப்பெற்றது.

மதுரை புக்ஷாப்
மு. கிருஷ்ண பிள்ளை,
அவர்களால்
வெளியிடப்பெற்றது.

1925 [விலை 0—4—0

670/1926/x/
OFFICE OF THE REGISTRAR
4-FEB 1926
MADRAS
O31,2x
N25
D23273.

2987 894.811
670/1926/1

# THE "MANOHARI."

## An Interesting new Drama in Tamil.

# மனோஹரி

இனிய செந்தமிழ் நவீன நாடகம்.

முதற்பாகம்

இஃது
முத்தமிழ் விநோதகான சபா
நாடக ஆசிரியர்
நெல்லை, T. S. சிவராமலிங்கம் பிள்ளை
அவர்களால் இயற்றப்பெற்று

OFFICE OF THE REGISTRAR
4 - FEB 1926
MADRAS

மதுரை புக்ஷாப்
மு. கிருஷ்ண பிள்ளை அவர்களால்
வெளியிடப் பெற்றது.
1925.

*Registered Copyright]* *[All rights reserved.*

PRINTED AT
THE "MEENAKSHI VILAS PRESS,"
MADURA—25

# முன்னுரை.

நாடகமென்றால் என்ன? புராணங்கள் கதைகள், இவைகளின் கருத்தை இனிய சங்கீத வசனத்துடனும், உபகர்ணப் படங்களாகிய விசித்திரப் படுதாக்கள் தட்டிகளுடனும் இயற்கையாகவே வேஷமிட்டு நடத்திக் காண்பிப்பதே நாடகம்.

எனது குருவின் அருள் வாக்கினாலும் செந்தமிழின் சகாயத்தினாலும் "மனோஹரி" என்ற இச்சரித்திரத்தை அடிமுதல் அந்தம்வரை இடத்திற் கேற்றவாறு பற்பல நூதன வர்ணமெட்டுகளைத் தெரிந்தெடுத்து, இராகம், தாளம், அமைத்து நடிகர்கள், நடித்தானந்திக்குமாறு என்னாற் தெரிந்தவரை எழுதி முடித்தேன்.

இதிலுள்ள கருத்துரையாவும் ஆனந்திக்கத் தக்கதே. ஆனதால் இப்பெயரானையும் இந்நூலையும் அன்புடன் ஆதரிக்குமாறு என் வந்தனத்தைச் செலுத்துகிறேன்.

தங்கள்

**நெல்லை- டி. எஸ். சிவராமலிங்கம்.**

நாடக ஆசிரியன்,

முத்தமிழ் விநோதகான சபா, மதுரை.

223273

# நாடகப் பாத்திரங்கள்.

1. வஞ்சக ஐயர் — மதனபுரி நகரில் ஒரு வேதியர்.
2. விசாலாக்ஷி — இவருடைய மனைவி.
3. விஜயாகரன் — இவர்களின் புத்திரன்.
4. பரசுராம ஐயர் — சந்திராபுரி நகரில் ஒரு வேதியர்.
5. கமலதேவி — இவருடைய மனைவி.
6. மனோஹரி — இவர்களுடைய புத்திரி.
7. ஸ்ரீதரன் — சந்திராபுரி மன்னன்.
8. சந்திரகாசன் — இவருடைய புத்திரன்.
9. ஜெயதந்திரன் — ஸ்ரீதருடைய மந்திரி.
10. ஜெயச்சந்திரன் — மந்திரி குமாரன்.
11. மங்களவதி — ஒரு கணிகை.
12. ரூபவதி — மனோஹரியின் மாறுதல் பெயர்.
13. இன்னும் — கமலாக்ஷி, வனசாக்ஷி. கடம்பன், இராமன், இடையர். தூதர்கள் முதலானவர்கள்.

நிகழிடம் — மதனபுரி, சந்திராபுரி, முதலான இடங்கள்.

# அங்கபாத்திரங்கள்.

1. வஜ்ரீ —வஜ்ரீகர ஐயர்.
2. விசா —விசாலாட்சி.
3. வி —விஜயாகரன்.
4. பர —பரசுராம ஐயர்.
5. கம —கமலதேவி.
6. ம —மனோஹரி.
7. ஸ்ரீ —ஸ்ரீதரன்.
8. ச —சந்திரகாசன்.
9. ஜெத —ஜெயதந்திரன்.
10. ஜெச —ஜெயச்சந்திரன்.
11. மங் —மங்களவதி.
12. ரூ —ரூபவதி.
13. கட —கடம்பன்.
14. இரா —இராமன்.

உ

சிவமயம்

# “ மனோஹரி ”

## விநாயகர் துதி.

பார்சி.

இராகம்—தோடி. தாளம்—ஆதி.

ஆனைமுக தேவா தேவா
அரனு ரருளால் வந்த முதல்வா
அன்னை சிவ காமி புதல்வா
அடிபணிந்தேன் வா (ஆ)

ஆசை வல்லபை நேசா
அன்பர் விஸ் வாசா
ஆதி ஈசா
சோதி பிரகாசா
அங்குச பாசமு மேந்தும்
அருமறை வாசா (ஆ)

(இந்த விடமுதல் ஏக-தாளம்.)

தஞ்சமென் றிங்குநான் வந்து பணிந்தேனே
பஞ்சையனைக் காரும் ஐங்கரனே
ரஞ்சித நாதனே அஞ்சினேனும் வேதனே
வஞ்சமிலா தருள் தரும் போதனே
சீலன்சிவராம லிங்கம் பதம்
பாலன் பாடி வந்தேன் உந்தன் பாதம் (ஆ)

## 1-வது களம்.

### மதனபுரி நகரம்.

### கலியாண மண்டபம்.

### மனோஹரிக்கும் விஜயாகரனுக்கும் திருமணஞ் செய்கிறார்கள்.

வஜீ. ஓய்! அத்திம்பீரே! தாம்பூலம் எடுத்துக் கொள்ளும். சீக்கிரம் நடக்கட்டும்.

பர. இந்தச் சந்தனம் எங்கேயாகிலும் வாங்கியது. ரொம்ப வாசனையா யிருக்கிறது.

வஜீ. எல்லாம், இங்கே தான் வாங்கியது. உங்கள் ஆசீர் வாதந் தான்.

வஜீ. ஏண்டி விசாலாக்ஷி! அந்தக்குட்டிகளை வரச்சொல்லு, நலுங்கு வைக்கலாம்.

[நலுங்கு வைக்கிறார்கள்.]

விசா. ஏண்டி கமலாக்ஷி! அந்தப் பாட்டைச் சொல்லேண்டி.

கமா. உமக்கு வேலை யென்ன? போம்! போம்!

வன. ஓய்! அத்திம்பீரே பாயாசத்திற்கு சர்க்கரை காணதென்று பரிசகாரர் கோபிக்கிறார்.

வஜீ. நீ போடி போ, நான் வரேன்.

விசா. ஜானகிக்குப் புடவை நன்னா யில்லையாம். நான் தான் உங்களை கோயம்புத்தூர் புடவை வாங்கச் சொன்னேனே, நீர் எதுக்கு கும்பகோணம் புடவை வாங்கினீர்.

வஜீ. போடி முண்டை! இது தான் சமயமோ? ஆத்துக்குள்ளே போ! போ! அத்திம்பீரே புள்ளையும் பொண்ணும் ஆத்துக்குள்ளே போகலாமோ?

பா. தடையென்ன! இரண்டு குட்டிகளைக் கூப்பிட்டு ஆலாத்தியெடுக்கச் சொல்லும்.

---

[எல்லாரும் வீட்டுக்குள் போய் விடுகிறார்கள்.]

---

## 2-வது களம்.

[வஜீகர ஐயரும் அவர்மனைவியும் அமர்ந்திருக்கிறார்கள். விஜயாகரன் வருகிறான்.]

இராகம்—பூர்வ கல்யாணி. தாளம்—ரூபகம்.

பல்லவி.

அன்பு நிறைந்ததாய் தந்தையரே யுங்கள்
அடி பணிந்தேனே. (அ)

அநுபல்லவி.

ஆனால் நீங்கள் அன்பு கூர்ந்து
ஆசி தாரும் அக மகிழ்ந்து. (அ)

சரணம்.

கருவி னுருவாகி ஜெனித்தயிப் புதல்வனை
காத்துமே போதித்தீர் கலைஞான நூல்தனை
ஏற்று மலரானை துதிக்கும் நற்போதனை
எந்நாளும் போற்றிட தருவீர் விடைதனை. (அ)

---

வி. தாய் தந்தையரே நமஸ்கரிக்கின்றேன்.

வஜீ. புத்திரா! விஜயாகரா! புத்திர சம்பத்தை அடைவாயாக.

விசா. கண்மணி! மங்களமுண்டாக.

வி. தாய் தந்தையரே நான் தங்களிடம் விடை பெற்றுக்கொள்ள வந்தேன்.

வஜ்ரீ. விஜயாகரா! திடீரென்று வந்ததும் விடைதரவேண்டுமென்று வேண்டுகிறாய். சீக்கிரமாய்த் தெரிவி, விடையின் காரணத்தை.

வி. தந்தையே! தெரிவிக்கிறேன்.

(கல்யாணம் என்ற வார்த்தையை.)

இராகம்—பியாக். தாளம்—ஆதி.

யாத்திரையும் செய்ய வேண்டுமே
தந்தையே நானே. (யா)

ஸ்ரீகாசி சிதம்பரம் காஞ்சி ராமேஸ்வரம்
திருக்காளாத்தி திரு வாலவாய் க்ஷேத்திரம்
தேவாதி தேவனருள் ஓங்குஞ் சமுத்திரம்
தெரிசித் தருள்பெறவே தருவீர் நீர் நல்வரம். (யா)

---

வி. தந்தையே! ஸ்ரீகாசி சிதம்பரம் திருக்காளாத்தி காஞ்சிபுரம் ராமேஸ்வரம் மதுரை கன்னியாகுமரி, இவைகள் போன்ற புண்ணிய க்ஷேத்திரங்களுக்கெல்லாஞ்சென்று தீர்த்தமாடி மூர்த்திகளை தெரிசித்தருள் பெறலாமென எண்ணுகிறேன். ஆதலால் யாதொரு ஆக்ஷேபனையுஞ் செய்யாமல் இச்சிறியேன் மீது அன்பு கூர்ந்து விடை தருவீர் தந்தையே!

வஜ்ரீ. விஜயாகரா! இது தானு தீர்த்த யாத்திரைக்குத் தருந்த சமயம். நீயோ சிறுவன் அதிலும் உனக்கு வாலிபச்சடங்குகளொன்றும் ஆகவில்லை. அவைகளெல்லா முடிந்த பிறகு அதைப்பற்றி யோசிக்கலாம். சீக்கிரமாய் வேத பாடசாலைக்குச்சென்று வேத பாராயணங்களைச் செவ்வையாய்ப் படித்துக்கொண்டு வா. விடை தந்தேன் சீக்கிரமாய்ச் சென்று வா.

(எத்தினை நேரமாக இப்படி.)

இராகம்—தந்நியாசி. தாளம்—ஆதி.

பல்லவி.

வி. இப்படி எடுத்துரைக்க எத்தனைநாளாய் நினைத்தீர்
எனக்குரை தவீரே. (இ)

அநுபல்லவி.

சத்தியமாக யிங்கு சாற்றினதால் நான்சொன்னதன்
சாஸ்திரம் சவிஸ்தாரம் விஸ்தாரமாயுணர்ந்தேன். (இ)

---

வி. தந்தையே! எனக்கு வேண்டிய அளவு சாஸ்திரங்களை எல்லாம் கற்றுக் கொண்டேன். நான் கற்றுணர்ந்த கருத்தின் பிரகாரம் தீர்த்த யாத்திரை செய்ய முன் வந்தேன். ஆதலால்:—

அநுபல்லவியைப்போல் யெடுத்துக் கொள்ளவும்.

தந்திடுவீ ரிங்கெனக்கு
தாரும்விடை போவதற்கு
தடுத்து வாது பேசவேண்டாம்
தாமதமுஞ் செய்ய வேண்டாம்.

வி. இதைப்பற்றி யெள்ளளவாகிலும் நீர் யெனக்கு போதிக்க வேண்டாம். ஏனென்றால் நான் கற்றுக் கொண்ட கருத்தின் பிரகாரம்.

எத்தனை சொல்ல வந்தாலும்
அத்தனையும் நான் வேண்டிலேன்

இத்தினம் சத்தியமாய்
நத்தியேசெல்லப் புகுந்தேன். (இ)

---

வி. சிறிது நேரம் கூட இங்கு தாமதிக்க இஷ்டமில்லாதவனாக யிருக்கிறேன் தங்களுடைய எண்ணம் போல் இங்கேயே இருப்பனாகில் பாழும் நரகத்திற்கே ஆளாகுவேன். ஆன தால்—

(ஏன்னையு மடிப்பவர்.)

வி. தந்தையே நீர் இங்கெனக்கு
தம் விடை போவதற்கு (த)
—மாயமான மண்ணுலகை
மாகவே நம்பி
—காயமான விண்ணுலகை
விடுவது மழகோ
பாவியான ஏழைமனம்
ஆவிபே அலையுந்தினம்
ஆதலால் விடைதருவீர்
ஐயனே தடைசெய்யாதீர். (த)

---

தந்தையே! இது விஷயத்தில் கொஞ்சமும் பின் வாங்கேன் தனயன்மீது அன்பு கூர்ந்து, புண்ணிய க்ஷேத்திரங்களுக் கெல்லாஞ்சென்று, தீர்த்தமாடி மூர்த்திகளின், திருவடியை தெரிசித்து, திருவருள் பிரசாதத்தைப் பெற்று வரும்படி இச்சிறியோனுக்குத் திருவுள்ள மகிழ்ந்து உத்தரவு தரும் படி முக்காலும், மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன்.

(பொன்னாலே உன்னாரு வார்த்து.)

வஜ். விஜயாகரா வேண்டாம் நில்லு
இங்கு-வீணாய்வா யாடாதே செல்லு
உனக்-கேனிந்த பிடிவாதம் சொல்லு
எனக்-கேற்காது வீண் தில்லு மல்லு.

வஜ். விஜயாகரா வேண்டாம் என் வார்த்தையைக் கேள். ஆங்காலம் யாவும் கைகூடும். மரம் பழுத்தால் வௌவாலை வாவென்று அழைக்குமா? இந்தச் சமயத்தில் நீ எங்கேயும் போகக்கூடாது.

வி. தந்தையே வனிந்த வாது
நீர்-தடுத்துரை செப்வது தகாது
இங்கு-தாமதத்தால் வருந் தாது
விடை-தருவீ ரெனக்கு இப்போது.

---

வி. தந்தையே! நான் யெவ்வளவோ யெடுத்துக் கூறியும் நீர் சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்லுகிறீர். இவை முற்றும் விசனிக்கத்தக்கதே சீக்கிரம்விடைதாரும்.

வஜ். புத்திரா! தந்தையிட்ட கட்டளையை மீறுவது உசிதமா? மேலும் உனக்குச் சடங்கு முகூர்த்த மொன்றும் இன்னுமாகவில்லை; ஆகையால் இன்னுஞ் சிலகாலம் இங்கிருந்து உனக்கு வேண்டிய பாடங்களை ஆராய்ச்சி செய்ததின் பின்னால் அதைப்பற்றிப் பேசலாம். தந்தை சொல் மிக்க மந்திரமில்லை யென்பதை நீ படிக்கவில்லையா?

வி. தந்தையே நீர் சொல்லியது உண்மையே. ஆலயந் தொழுவது சாலவும் நன்று யென்பது நீரறிந்த விஷயந்தானே. ஏன்

நான் ஆலயங்களுக் கெல்லாஞ் சென்று வரக்கூடாது. இனி ஒரு நிமிஷமுந் தாளேன்.

இராகம். விருத்தம், பைரவி.

கதிரவன் திக்குமாறி தென்வட லுதித்திட்டாலும்
நதிபதி யளவு மீறி கரையைவிட் டகன்றிட்டாலும்
கதிதரும் புவனமாறி தலைகீழாய் மாறிட்டாலும்
கதியவ னன்றிவேறு கவனமுங் கைக்கொள்ளேனே.

---

வி. பிதா! இதுவரை தந்தையெனப் பொறுத்திருந்தேன். இனிப்பொறுக்க மாட்டேன். இத்துயரம் யேனென்றால் சாக்ஷாத்சிவபெருமான் தன்திருவிளையாட்டைச்சகலருக்குங்காண்பிக்கும்பொருட்டு, திருக்கைலாச மென்றும் துவாதசாந்த க்ஷேத்திர மென்றும் ஆலாசிய மென்றும், மதுரையம்பதி யென்றும் கடம்பவன மென்றும், ஆலவாய் யென்றும், தேவர்களும் மூவர்களுந் துதிக்கும்படியான 64 திருவிளையாடல்கள் நடைபெற்ற ஆறுதாரத்திலும் மேன்பாடு தங்கிய மதுரையம்பதியில் அங்கையர்க் கண்ணி சமேதராய் எழுந்தருளி யிருக்கும் சாக்ஷாத் சோமசுந்தரக் கடவுளைத் தெரிசிக்காத ஜென்மம் இருந்தென்ன போயென்ன. ஒருக்காலுந் தாளேன். இதோ செல்ல சித்தமாயிருக்கிறேன். விடைதர முடியுமா. என்ன?

வஜீ. விஜயாகரா! இவ்வளவு துணிவுடன் நீ வினவியதால் உன்னிஷ்டம்போல் மங்களமாய்ச் சென்றுவா.

வி. தாயே! உமது யெண்ண மென்ன?

விசா. கண்மணி! உன் தந்தையைவிட நான் என்ன நீதியைத்தெரிவிக்கப் போகிறேன். மேலும் இவ்வளவும் தெரிந்துகொண்டவன் தந்தை சொல் மீறலாகாது என்பதை ஏன் தெரிந்துகொள்ளவில்லை. எல்லாம் மனம் போலவே நடக்கும். நீ மங்களமாய்ச் சென்றுவா.

வி. அம்மணி! யாவையும் உண்மையே! விடை பெற்றுக் கொள்கிறேன்.

## 3-வது களம்.

### மனோஹரியிடம் விஜயாகரன் வருகிறான்.

ம. நாதா! நமஸ்கரிக்கிறேன்.

வி. கண்மணி! மனோஹரி என்னருகில் வா, நான் ஒரு விஷயத்தைப்பற்றி உனக்குத் தெரிவிக்கப் போகிறேன், நீயாதொரு ஆக்ஷேபனையுஞ் செய்யாமல் விடை தர வேண்டும்.

ம. நாதா! காரியம் இன்னதென் றறியாமல் நான் யெப்படி விடை தருவேன். இச்சிறியாள் மீது தயை கூர்ந்து தெரிவியுங்கள் விஷயத்தின் கருத்தை.

வி. தெரிவிக்கிறேன்.

இராகம்—காம்போதி. தாளம்—ரூபகம்.

பல்லவி.

வி. நான் க்ஷேத்திர யாத்திரை
செய்திடவே நினைத்திட்டேன்
உறுதியாகப் புறப்பட்டேன். (நா)

சரணம்.

காசி ராமேஸ்வரம் காளாத்தி சிதம்பரம்
காக்ஷிதரு முயர் கடம்பவன க்ஷேத்திரம்
சேவித்து தெரிசித்து பெற்றிடுவேன் வரம்
பாவித்து உளமகிழ்ந்து
பாலனங்கு சென்று வாரேன். (க்ஷே)

---

வி. கண்மணி! மனோஹரி புண்ய க்ஷேத்திரங்களுக் கெல்லாம் சென்று தீர்த்தமாடி மூர்த்திகளைத் தெரிசித்து அருள்பெற்றுவரலாமென எண்ணுகிறேன்.

(ஜயாசா பர்ணு.)

ம. அன்பு நிறைந்த மன்னவா நீரும்
அகல்வது நிதியோ கூருவீர்.
வி. அகன்றிடி லென்ன மாதரசே நீ
அஞ்சவேண்டாம் தேருவாய்.
ம. என்னை நீர் தனியாய் இங்கென்னை விட்டு
ஏகுவது மென் தலை விதியோ.
வி. ஏகிடி லென்ன வருந்திட வேண்டாம்
விரைவினில் வருவேன் என் மதியே.
ம. சத்தியஞ் செய்வீர் நிச்சயமாகவே
பாவி மனோஹரி என் கையில்.
வி. சத்தியமாக விரைவினில் வருவேன்
கவலை வேண்டாம் செல்கையில்.
ம. ஈஸ்வரன் மேலாணையாய்
வி. இங்கு செய்தேன் உண்மையாய்

ம. அப்படியானால் நான் விடை தந்தேன்
சென்றுமே வருவீர் தானின்று.

வி. இப்படி வருவாய் என்னருங்கண்ணே
இன்பமாய் முத்தம் தாவொன்று.

---

வி. மனோஹரி! மோகனாங்கியான உன்னை இங்கே வைத்து விட்டு, நான் அங்கேயே இருந்து விடுவேனா? ஒருக்காலும் இருக்கமாட்டேன். நீ கவலையடையாதே. நீ பருவதிசை அடையுஞ்சமயம் நிச்சயமாய் வந்துசேருவேன். உன்னன்பு நிறைந்த மனப்பூர்ணமான எண்ணத்தோடு எனக்கு விடை தருவாய் கண்மணி.

ம. நாதா! என்னை மறந்து விட்டு அங்கேயே யிருந்து விடக்கூடாது.

வி. ஒருக்காலுமிருக்க மாட்டேன் சீக்கிரமாய் வந்து சேருகிறேன்.

ம. சென்று வாருங்கள். ஆனால் ஒன்று. தாங்கள் க்ஷேத்திர யாத்திரை செய்து திரும்பி வரும் வரை, என் தாய் தந்தையரிடஞ் செல்லலாமென எண்ணுகிறேன்.

வி. அதிலென்ன தடை சென்று வா கண்மணி.

ம. நாதா! சென்று வருகிறேன்.

வி. சென்றுவா.

---

வி. இன்று தான் என் மனம் ஓர் நிலைக்கு வந்தது. என் பெற்றோர்களிடமும், என் பத்தினி யிடமும் விடைபெற்றுக் கொண்டேன். இதோ சென்று வருகிறேன். க்ஷேத்திரயாத்திரைக்கு.

இராகம்—காம்போதி. தாளம்—ரூபகம்.

பல்லவி.

வி. சரவணபவ ஷண்முக வேலவனே
சாற்றும்நிதி தமிழோதிய மாற்றறியாசிவகதிபர (ச)

சாஸ்திரங்க ளறிந்திடுந்திரு ஸ்தோத்திரங்களுண
(ர்ந்திடும்பர (ச)

சாற்றிடும்புவி யுற்றிடுந்துயர் போற்றிடமருள்
(பெற்றிடு முயர் (ச)

சதுர்முகன்திரு அரிபுகழுரு சிவகுணவுரு
(தினமகிழ்பெறு (ச)

சாருமதிமானு மழுவுங்கொண்ட ஆலகால
(சிவனருள் கொண்ட (ச)

அநுபல்லவி.

தாரணியோர் புக ழோதிடுந்திரு
தணி—காசலப் பெயரோங்கிடுந் திரு
கழு—காசலக்குற வள்ளியின் திரு
நா தன் — குரு
வே தன் — அருள்
நீ தன் — பிரக்
யா தன்
சந்தத்திருப் புகழோங்கிய
கந்தப்பதி மகிழோங்கிய (ச)

சரணம்

ஆறுமுகத்தோனே பன்னீர் கரத்தோனே
ஆடுமயிலோனே பாடு முருகோனே

பாடும் பிள்ளைத்தமி ழோங்கிய திரு
பாலவடிவேலவா யுனைத்துதித்தேன்.
இருளை வெறுத்தேன்
அருளைப் பதித்தேன்
பொருளைக் குறித்தேன்
திருக் காசலமுரு
கேசனை யருள்
ஈசனையுனை யடுத்தேன்
ப, பலதுய ரற்றிட யருள்
பொற்பதந்தரும் நற்பெயரான. (ச)

தனக்கு நிகரில்லை என்று உளரிய
தாருகாசூரனை எதிர்த்து சமர் செய்தாய்
சாற்றுஞ் சிவராம லிங்கமனு தினம்
சாற்றிடுமுறை முற்றிலு மருள்
பெற்றிடுமுனைப் போற்றினேன் திரு (ச)

---

## 4-வது களம்.

## ஸ்ரீதரன் வேட்டையாடி விட்டு வருகிறான்.

(பசிக்குதேன பால் குடித்தேன்.)

ஸ்ரீ. வேகமாய் நான் வந்ததினால்
தாகமு மிகக் கொண்டேனே
தாக மிங்கு தீர நீயும்
நீரிருக்கு மிடஞ் சொல் லிங்கே. (வே)
கண்கள் ரெண்டு மயங்குதையா
காதுகள் பஞ் சாகுதையா
கரங்க ளிரண்டும் அயருதையா
கால்கள் ரெண்டுஞ் சோருதையா. (க)

---

ஸ்ரீ. ஜெயதந்திரா! வேட்டையாடிய அலுப்பாலும், நடந்துவந்த களைப்பாலும், நீர் வேட்கை அதிகரித்து விட்டது. ஆகையால் தண்ணீரிருக்கு மிடத்தைத் தெரிவிப்பீர்.

ஜெ.த. ஐயனே! அதோ சமீபத்தில் தெரிகிறதே, அந்தச் சோலையின் நடுவே ஒரு சுனை யிருக்கிறது. அங்கே சென்று நீரருந்தி வாருங்கள் ஐயனே.

ஸ்ரீ. அப்படியே செய்கிறேன். நான் திரும்பி வரும் வரை நீங்கள் எல்லாரும் இங்கே இருங்கள். நான் சிறிது நேரத்தில் இங்கே வந்து சேருகிறேன்.

ஜெ.த. அப்படியே செய்கிறோம். தாங்கள் சென்று வாருங்கள். ஐயனே!

[ஸ்ரீதரன் சென்று விட்டான்.]

---

## 5-வது களம்.

## பூங்காவனம்.

மனோஹரி புஷ்பமெடுக்க வருகிறாள்.

(ஆலகாலமாய்.)

இராகம்—அமீர்கல்யாணி. தாளம்—ரூபகம்.

கண்ணிகள்.

ஆசையானநற் வாசமேவிடும்
அமைந்த இவ்வனக் காக்ஷியே
அளவில்லாதுயர் மலர் மலர்த்தருள்
சுகந்தரு மின்ப மாக்ஷியே. (ஆ)

குயிலுடன் குயில் ராகம்பாடவே
பேடெனவை கூடியே

ஒன்றுபோல் மயில் நின்றுலாவியே
கொண்டலசை வதை நாடியே.

ம. இந்த நந்தவனத்தின் அழகே யழகு சுகந்தத்தைத் தரக்கூடிய, பற்பலவிதமான புஷ்பச் செடிகளும், அவைகளில் பல வர்ணங்களுள்ள புஷ்பங்கள் மலர்ந்திருப்பதும், வண்டினங்கள், அதிலுள்ள மதுவை உண்டிட, ரீங்காரத் தொனியுடன் மாறிமாறி மகரந்தத்தை மிதித்துச் செல்வதும், மயில், தன் சிகையை விரித்துக் கொண்டு மேகத்தைப்பார்த்து அகவுவதும் குயில் தன் பேடுகளுடன், ஜோடியா யமர்ந்து கொண்டு ஊசலாடிப்பாடுவதும், அன்னங்களும், மான்குட்டிகளும், அங்கு மிங்கும் உல்லாசமாய்த் திரிவதும் என்ன ரமணீகரமா யிருக்கின்றன. அம்மட்டோ. இப்பெருஞ் சோலையின்:—

நடுவில் மண்டபம் அமைந்த அரவிந்தம்
நிறைந்த நீருடன் மடுவுமே
நங்கையோர் தினம் வந்து அமர்ந்திட
நான்கு மூலைகள் மேடையே. (ரு)

அங்கங்குளிர்ந்திடும் சலவைக் கல்லினால்
அமைத்துள்ள துய்யப் பீடமே
சங்கம் புகழ்சிவ ராமலிங்கமும்
செய்த செந்தமிழ்ப் பாடமே. (அ)

---

ம. நான் வந்து ரொம்ப நேரமாய் விட்டது. ஆனதால் ஜலக்கிரீடைசெய்து புஷ்பமெடுத்துச் செல்லுகிறேன்

## ஸ்ரீதரன் நீரருந்த வருகிறான்.

ஸ்ரீ. ஆஹா! என்ன அழகு இந்த மாதிரி ஓர் வனத்தை நான் இதுவரை கண்ணுற்றதே இல்லை. நான் நீரருந்திவிட்டு இந்த வனத்தின் அழகைப்பற்றி வர்ணிக்கிறேன்.

[தண்ணீர் சாப்பிட சென்று விட்டான்.]

ஸ்ரீ. இந்தச்சோலையின் காக்ஷியே! காக்ஷி! இதன் அழகைப்பற்றி என்னால் தெரிந்த மட்டும் வர்ணிக்கிறேன்.

(காக்ஷி கண் காக்ஷியே.)

ஸ்ரீ. இவ்வனக் காக்ஷியே
எங்குமில்லாப் பெரு மாக்ஷியே
எத்திக்குந் தித்திக்குஞ் சுகந்தரும் (இ)

தங்கும் பொங்கும் பரிமளம்
எங்கும் துலங்கும் மரம்நிறை (இ)

இனிமைச் சுகந்தருங் கனியைச்சுமந்ததோர்
பனியைக் கழியுடங் தனியாப் பருகிடும் (இ)

விண்ணுலகம் தன்னிலுள முனிவர்களும்
மண்ணுலக மீதிலுளோர் தேடி வரும் (இ)

தாகத்தை யேதீர்த்த மேகத்தை யேயொத்த
நீர்மெத்த வேபெற்ற பாகத்தை யிங்குற்ற (இ)

மானிலத்தினி லேமகத்துவ மேமிகுத்தநற்
(மரங்க ளெத்தனை
கானகத்தி லேயுதித்ததோர் மயில்களெத்தனை
(குயில்க ளெத்தனை (இ)

பாங்கான தென்றல் வீசும்
பற்பல அற்புத நர்த்தன மாடிடும் (இ)

சரணம்.

பரிமளம் வீசுஞ்சாலை
பாங்குடனமைந்ததோர் கற்பகச்சோலை

சரியான சந்தணந் தேக்கு
சலசலவென்றிடும் கமுகு செந்தாழை
அரலிசெவ்வந்திமரு அந்திமந்தாரம் கதலி
(செவ்வாழை
மருதோன்றி இருவாட்சி மல்லிகை முல்லை
(தவராது காலை
நல்-அழகுடன் விரிந்தவை கமழுடன் இதழாக ஆடி
அதைக்-கண்டுமே யுண்டிட வண்டினம் வந்ததில்சாடி
மகரந்த மீதில் நாடி.
மதுவை யுண்டு பாடி
பக்குவமான காந்தி
பளித்திடும் பொன்னிறச் சூர்யகாந்தி (இ)

ஒயிலான குயிலினச்சோடி
ஒன்றுபோல் இன்னிசை பண்ணுடன் பாடி
செண்பகம் மாடப்புராக் கிளி
செழுங்கிளை மீதினில் ஊசலுமாடி
கவுதாரி மைனக் காடை
மரங்கொத்தி கருவாலி அனுதினந்தேடி
கர்ணப்புரா பகிரி
கணக்கிலடங்காத தூக்கணங் கோடி
பல-விஜித்திர நர்த்தன மயிலன்ன மிங்கு யிதேஷ்டம்
சில-கன்னியர் அநுதினம் தவராது வருவார்கள்கூட்டம்
செந்நிற விந்தமும் கோடி
சிவராமலி ங்கம்பதம் பாடி
செப்பிய சொற்படி இப்படி மேற்படி (இ)

---

ஸ்ரீ. இந்த வனத்தை வர்ணிப்பதென்றால் யாராலாகும். இதன் அழகே அழகு. சுகந்த இன்பத்தைத்தரும் புஷ்பங்கள்நிறைந்த புஷ்பச் செடிகளும் இனிய கனியைத் தரும் கனி மரங்களும் பறவைகளும் மான்களும் நிறைந்த இச்சோலையின்

நடுவே அரவிந்த மலருடன் நிறைந்த பன்னீர் போன்ற நீர் நிறைந்தமடுவும், மடுவின் நடுவில் நீராளிமண்டபமும், தடாகத்தின் அருகில் தங்கி இளைப்பாற அமைந்திருக்கும் சலவைக்கல்மண்டபமும், பார்க்கப் பார்க்க என் மனம் பரவசமாகிறது. நான் ரெம்பத் தூரம் நடந்துவந்த அலுப்பாலும், தண்ணீர் சாப்பிட்ட களைப்பாலும், எனக்குச் சிரமமேலிடுகிறது. ஆகையினால் சற்று நேரம் இந்தச் சலவைக் கல்லின் மீது உல்லாசமான தென்றல் வீசும்படி அமர்ந்து அதன் பிறகு என் மந்திரியிடஞ் செல்லுகிறேன்:—

இராகம். விருத்தம். கானடா.

ஸ்ரீ. அற்புத மொன்றுகண்டேன் அயர்ந்துநா னமர்ந்தகாலே
பொற்பத முற்றமேனிச் சிற்றிடைச் சிறியாள்வந்து
கற்படி மீதமர்ந்த காவலா னெனையம் மாதின்
சொற்படி கேட்டுநிற்க துயில்வதைக் கலைத்துநின்றாள்.

---

ஸ்ரீ. நான் அலுப்பினால் இந்தச் சலவைக் கல்லின்மீது அமர்ந்து நித்திரை செய்யுஞ் சமயம் மின்னலை நிகர்த்த மேனியை யுடைய ஒருபெண்மணி, இப்பூஞ்சோலையின் நடுவேதோன்றி, என் நித்திரையைக் கலைத்து புத்தியை, மிறட்டிச்சென்றாள். அது யாராயிருக்கலாம். உள்ளே சென்று பார்க்கிறேன்.

(காதைஹமநேரி வாரிசலோ)

ஸ்ரீ. கண்மணியே! பெண்மணியே! ஓடவேண்டாம் நில்லு
கலங்க வேண்டா மிங்கு வந்த காரணத்தைச் சொல்லு.

ம. மல்லிகை மலரெடுக்க யிங்கு நாடி வந்தேன்
மறித்து யென்னை யழைத்ததாலே மேனிவாடி நொந்தேன்.

ஸ்ரீ. சொந்தமான உந்தனூரும் பேருமிங்கே சொல்லு
சந்தோஷமாகச்சொல்லிடில்நான் தருவேன்விடைசெல்லு.

223273

ம. நீர்நிலம் வளம் நிறைந்த சந்தராபுரி தேசம்
நிம்மதியை மனோஹரியென் றழைக்குமேயத் தேசம்.

ஸ்ரீ. அன்புடனே உன்னை ஈன்ற தாய் தந்தையர் யாரோ
அவர் பெயரை எனக்குரைப்பாய் உண்மையாக நேரே.

ம. தந்தை பெயர் பரசுராமன் தாயார் கமல தேவி
இங்கு-தாமதிக்க இஷ்டமில்லை செல்வேன் நகர் மேவி.

ஸ்ரீ. உனக்குமண மானதோ இல்லையே நீ யோது
உத்தமியே சொல்லி விட்டு செல்லுவா யிப்போது.

ம. ஆறுமான மானதையா எனக்கு மாலை சூட்டி
அதட்டி யென்னை மிரட்ட வேண்டாம் எதையுஞ்
சுட்டிக்காட்டி.

ம. ஐயா! நானிருப்பது சந்திராபுரி தேசம் என் தந்தை பெய பரசுராம ஐயர், தாயார் பெயர் கமலதேவி, என்னை மனோ ஹரி யென்று சொல்லுவார்கள். நான் இக்காலையில் ஜலக்கி ரீடைசெய்து, பூஷைக்குப் புஷ்பமெடுத்துச் செல்லலாமென இங்கு வந்தேன். ஒருவேளை என்னைப்பெற்றோர் தேடி வந் தாலும் வருவார்கள். இதோசெல்லுகிறேன் சந்திராபுரிக்கு.

ஸ்ரீ. நீ தனியாகத் தான் வந்தாயா?

ம. துணையின்றி தான் வந்தேன்.

ஸ்ரீ. பருவதிசை யடைந்த நீயும் இப்படித் தனியாய் வரலாமா?

ம. சந்திராபுரி மன்னனாகிய, ஸ்ரீதரன் மகாராஜா, இராஜ்யத்தி லுள்ளவரை யெங்களுக்குப் பயமேது.

ஸ்ரீ. நீ யெந்த அரசனால் பயமில்லை யென்று சொல்ல வந்தாயோ அந்த:—

(மாயபுலகர நைநோரே)

ஸ்ரீ. ஸ்ரீமதி மனோஹரி மடமானே
கேள்-ஸ்ரீதரன் என்பவன் நான் தானே
கண்மணி மாதே நீ கவலை நீ கொள்ளாதே
களிப்புடனிங்கிரு மொழிகிறே னிப்போதே
மானே மானே தேனே நானே. (ஸ்ரீ)

ம. பாதம் பணிந்தேன் மன்னவனே
சிறு-பாவை மனோஹரி தணிவுடனே
விரும்பியதைச் சொல்லும் விடையிங்கு
(மொழிகிறேன்
வீண் காலமாகுது வேண்டிப் பணிகிறேன்
அருள்வீர் அருள்வீர் பதிலுரை பகர்வீர். (பா)

---

ஸ்ரீ. மனோஹரி! எவனைக்குறித்துச் சொன்னாயோ அம்மன்னன் நானே! நான் உன்னிடத்தில் ஒரு விஷயத்தைப் பற்றிச் சொல்லப் பிரியப்படுகிறேன். நீ சொல்லும்படி தெரிவித்தால் மொழிகிறேன்.

ம. நீர் கோறிய விஷயத்தை என்னிடஞ் சொல்லும். நான் சொல்லிவிட்டுச் செல்லவேண்டும். ஐயனே! ஒருவேளை என்னைத் தேடி யாராவது வந்தாலும் வருவார்கள்.

(துணியாச் சாரி)

ஸ்ரீ. மலர்நிறைச் சோலையில் வந்தயென் மங்கையே
மணமாலைச் சூட்டிட எண்ணினே னிங்கேயே

ம. சத்திய மன்னனே உத்தம மாகுமா
சத்திரிய நீதியை மறப்பது மேற்குமா

ஸ்ரீ. மனமே மகிழ்வாய் தருவாய் விரைவாய்
மணமே க்ஷணமே பெறுவாய் குணமாய்

ம. மன்னவனே வாதுநீர் செய்வது மாகாது
மங்கையே மறித்துரை செய்வது மேற்காது.

---

ஸ்ரீ. மனோஹரி! இந்தச்சந்திராபுரிக்கரசனாக நானிருந்தும், உன்னைப்போன்ற ஒருகன்னிகா ரத்தினத்தை, இதுவரை கண்டுற்றதே யில்லை. இந்தஉல்லாசமான தென்றல் வீசும், இந்தச் சோலையில், கண்ணுற்றது முதல், என் மனம் வாதையடைகிறது. ஆகையால், உன்னை இந்தநந்தவனத்தில்வைத்து காந்தருவ விவாகஞ்செய்து கொள்ளலாமென வெண்ணுகிறேன்; உனது வெண்ணம் யாதோ?

ம. என்ன வார்த்தை தெரிவித்தீர் இதுதானா செங்கோல் நீதி? நீரோ சத்திரியர், நானோ பிராமணச் சிறுமி, மேலும் எனக்கு விவாகமாகி ஆறுமாதகாலமாய்விட்டன. அதைப்பற்றி முன்னமேயே தெரிவித்திருக்கிறேன். இது ஞாயமல்ல இதோ செல்லுகிறேன் சந்திராபுரி நகருக்கு.

(என்னை ஏமாற்றலாமா)

ஸ்ரீ. ஓடாதே நில்லு நில்லு
ஓடாதே நில்லு நில்லு
உனக்கு அழகில்லை தடுத்துரைத்து நீ
எனக்குரை தரும் மரக்குயிலே நீ (ஓ)

---

ஸ்ரீ. உன்னை விட்டுவிடுவேனென் றெண்ணாதே! என்னை இன்னானென்று அறியாயோ? ஸ்ரீதரனின் மகிமையை அறிந்திருந்தும், இவ்வாறு தடுத்துரைக்கின்றனை. சாதாரணமான, ஒரு ஏழைப்பிராமணனைக்கட்டி, அழுவதைப்பார்க்கிலும் என்னைப்போன்ற ஒரு அரசனை மணந்துகொண்டால், படைவீரர்களென்ன, மந்திரிகளென்ன, இராஜ்யபார மென்ன, காவலாளிகளென்ன, நீயும் பட்டமகிஷியா யிருக்கலாம், இந்த வேளையில் என் சொல்லைத் தடுக்காதே.

இராகம்—நாட்டைக்குறிஞ்சி. தாளம்—ரூபகம்.

பல்லவி.

ஸ்ரீ. எனது மகிமை முற்று முணராமல்
என்வாது செய்கிறாய் பெண்ணே
இப்பொழுதே யிங்கு வேண்டும் பொருளோது
தப்பாது தருகிறேன் முற்றிலு மிப்போது (எ)

எண்ணிப்பாராமல் நீ உன்னிப்பேச வந்தாய்
கண்ணியமாய் வந்த மாதே
குண சாதே
வாயிப் போதே
தடுக் காதே
சல்லாப மெல்லிய உன்னைமணங் கொள்ள
உல்லாசமாகவே வந்தேனிங்கு மெள்ள (எ)

ம. பார்த்தோர்நகைப்பார்கள் வேண்டாஞ்சம்பிரதாயம்
மூர்த்தோர் சொல் வார்த்தையைத் தடுத்து
என்னை அடுத்து
வாது தொடுத்து
மொழி விடுத்து
போதும்போதுமிந்த வார்த்தையை நீர்விடும்
போகாவிடி லெந்தன் உயிரை நீர் வாங்கிடும்

---

ம. சகலநீதியை உணர்ந்து இந்த இராஜ்ய பாரத்தை ஏற்றுக் கொண்டு நடத்தி வரும் மன்னரான நீர்,

வெண்பா.

நண்டு சிப்பி வேய்கதலி நாசமுறும் காலத்தில்
கொண்ட கருவளிக்கும் கொள்கைபோல்—ஒண்டோடி

போதம் தனம் கல்வி பொன்றவரும் காலம் அயல்
மாதர்மேல் வைப்பார் மனம்.

---

என்ற நல்வழி நீதியை நீர் அறியவில்லையா? என் வீணை யேணமறித்து, இந்த வார்த்தைகளை உரைக்கின்றீர். நீர் இதைவிட யெத்தனை மடங்கு எடுத்துரைத்தாலும் அதை என் செவியில் படாதபடி யென் மனந்தடுத்து நிறகிறது. நான் வந்து ரொம்ப நேரமாய் விட்டது. இல்லத்திற்குப் போகவேண்டும். இதோ செல்லுகிறேன். இன்னும் மீறி தடுப்பதென்றால் என்னுயிரை ஏற்றுக் கொள்ளும்.

ஸ்ரீ. மனோஹரி! உன் மனம் கல்லா? இரும்பா? கல்.

வெண்பா.

நீறில்லா நெற்றிபாழ் நெய்யில்லா உண்டி பாழ்
ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்—மாறுஇல்
உடற் பிறப்பில்லா உடம்புபாழ் பாழே
மடக்கொடி இல்லாமனை.

---

என்படி மனையாளைக் கொள்ள வேண்டுமென்றெ ண்ணத் துடனிங்கு வந்தேன் "கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்தது போல்" என் கண்ணில் தென்பட்டாய் உன்னைப் பார்த்தது முதல் என் மனம் பூரித்து என்னை யறியாமலே இவ்வளவு தூரம் நேர்ந்து விட்டது.

ஸ்ரீ. உனக்கு என்னை மணந்து கொள்ள சம்மத மில்லையே?

ம. சம்மதமில்லை.

ஸ்ரீ. அப்படியானால் இன்னொரு வார்த்தை பாக்கி யிருக்கிறது அதைச் சொல்லுகிறேன். அதாவது, இவ்வனத்தில் உன்னு டன் கொஞ்சி விளையாடி இன்பம் பெறலாமென எண்ணுகி றேன் ஆகையினால்:—

(திவ்விய புருஷன் நீர் யார்.)

ஸ்ரீ. மங்கையே என்னைச் சேராய்.
ம. இங்கே நீர் சொன்னீர் சீராய்
ஸ்ரீ. தாமதம் ஏன் செய்கிறாய்
ம. வாய்மதம் வேண்டாம் போவாய்.
ஸ்ரீ. மதனென்னை யிங்கு கணைதனை மூட்டி வாட்டுகிறான்.
ம. மதமுடனென்னை துபர்தரு மொழி மூட்டுகிறாய்.
ஸ்ரீ. பக்கம் வாராய் செந்தேனே.
ம. மிக்க மனம் நொந்தேனே.
ஸ்ரீ. பதில் பகர லாகுமடி.
ம. பாவமுனைச் சூழுமடா.
ஸ்ரீ. பக்குவமே சேர்ந்திடுவாய்.
ம. தக்குமோடா நடந்திடுவேன்.
...ல் கடுமொழி தரும் பதியுனை லேசில் விடேன்.
ம. எதிர் மனமொழி உழமகிழொடு நானுங்கொடேன்.
ஸ்ரீ. சுவைதரும் பதம் இதுவேளை தனிற் பெற்றிடுவாய்.
ம. சிவராமலிங்கம் பதப்பாடி நானும் அகன்றிடுவேன்.

---

ஸ்ரீ. கண்மணி! மனோஹரி என்னை அந்தப்பொல்லாத மன்மதன் வந்து மோகத்தை மூட்டுகிறான். இந்த வேளை பாதொரு ஆக்ஷேபணையுஞ் செய்யாமல் உல்லாசமான இளந்தென்றல் வீசும் இந்த பூங்காவனத்தி லமைத்திருக்கும் சலவைக் கல்லின் மீது அமர்ந்து சரசமொழியாடி என் காதலைத் தீர்த்திடுவாய் காதலி.

ம. ஐயா! நீர் இந்தச் சந்திராபுரி நகருக்கு ஒரு மன்னனாகயிருந்தும் கேவலம் பெண்மீதா உன்காதலைச் செலுத்த முன்

வந்தீர். தஞ்சமென்று சரணமடைந்த இச்சிறுமியைவாதைப்படுத்துவது உமக்கு அடுக்காது. ஆனாலென்னை மணந்துகொண்டபின் இன்னுமொரு மாதையும் மணப்பீரல்லவா?

ஸ்ரீ. மனோஹரி! யென்னுசை நாயகியாகிய நீ இருக்கும் பொழுது இன்னுமொருமாதையும் மணப்பேனா? அதில் கொஞ்சமுஞ் சந்தேகங் கொள்ளவேண்டாம். வன் வீண் காலதாமதஞ் செய்கிறாய், வா போகலாம்.

ம. அப்படியானால்! ஆவின்பாலைக் கொணர்ந்து சத்தியஞ் செய்து தரவேண்டும். சம்மதந்தானா?

ஸ்ரீ. என் வாயினால் சொன்னால் போதாதோ.

ம. பாவில்த்தான் சத்தியஞ் செய்து தரல் வேண்டும்.

ஸ்ரீ. நான் சென்று பாலைக் கொண்டு வருகிறேன். நான் வருகிற வரை நீ யெங்கேயும் போய்விடக்கூடாது.

ம. ஒருக்காலும் போகமாட்டேன். துரிதமாக வ...

[ஸ்ரீதரன் பால் கொண்டுவர சென்று விட்டான்.]

ம. இது தான் சரியான சமயம் ஸ்ரீதரன் சென்று விட்டார். நான் இதோ செல்லுகிறேன் சந்திராபுரி நகருக்கு.

[மனோஹரியுஞ் சென்று விட்டாள்]

## ஸ்ரீதரன் வந்து பார்க்கிறான்.

ஸ்ரீ. ஏ மனோஹரி! மனோஹரி! மனோஹரி! இதுதானா கேலிச்செய்யத் தகுந்த சமயம் யெங்கு சென்றிருப்பாள் உள்ளே சென்று பார்க்கிறேன் காணவில்லையே.

ஸ்ரீ. இந்த நந்தவன முற்றிலுந்தேடிப் பார்த்தேன் காணவில்லை. இருக்கட்டும், யென்னை விட்டு தப்பித்துச் சென்றாள் போ

னும். இருக்கட்டும், யென்மனதைக் கவர்ந்தா சென்றனே காதலி,

கெஜல்.

பாலைநீர் கொணர்ந்துயிங்கு பரம்பொருள் சாக்ஷியாகக்
காலையிற் பாவையாளின் கரந்தனிற் சத்தியஞ் செய்து
மாலைநீர் சூட்டிக்கொள்ளும் மணவரைக் கோலத்தோடுச்
சோலைவிட் டகன்றுநாளும் ஏகலா மென்ற நீயும்
சாலையிற் தனிக்கவிட்டு தனித்துநீ செல்லலாமோ
ஆலையின் கரும்புபோல அலறியே தவித்து நின்றேன்.

---

ஸ்ரீ. ஏ காதலி! என்னைப் பாலைக்கொண்டு வரும்படி சொல்லி விட்டு நீயும் போகலாமா? நான் ஆலையிலிட்டக் கரும்பு போல அலறித் துடிக்கின்றேனே, இந்தச் சமயத்தில் என் முன் வந்து நாதா யென்று என்னை யழைக்கக் கூடாதா. நான் உனக்குச்செய்த தீங்குயென்ன. இருக்கட்டும், "கைக் கெட்டியது வாய்க்கெட்டாமல் போய்விட்டது." இருக்கட் டும், இப்பொழுதே என் நகருக்குச் சென்று உன்னையே நான் மணந்து கொள்கிறேன். இதோ செல்லுகிறேன் என து மந்திரி யிடம்.

## 6-வது களம்.

[மந்திரிகளும் வில்லாளிகளும் நித்திரை செய்கிறார்கள். ஸ்ரீ தரன் வருகிறான்.]

ஸ்ரீ. மித்திரா ஜெயதந்திரா! எழுந்திரு அலுப்புமேலிட்டதினால் நித்திரை செய்தீர்கள் போலும்.

ஜெத. ஐயனே! செல்லலாமா நம் நகருக்கு.

ஸ்ரீ. செல்லுவதில் என்னதடை என்றுங்காணாத ஓர் கண்காக்ஷி யை இன்று கண்ணுற்றேன் அவைகளைச் சொல்லி விட்டு

அதன்பின் நம் நகருக்குச் செல்லலாமென எண்ணுகிறேன்

ஜெய. தெரிவியுங்கள் ஐயனே.

(உத்தமியே ஜெயக்)

ஸ்ரீ. தாகத்தினு லலேந்து சோலையிற் சேர்ந்தேன்
தாகந்தீர்ந்ததும் வந்தோர் கல்லின்மீ தமர்ந்தேன்
மோகம் நிறைந்த தொரு குயிலதைக் கண்டேன்
முற்றும் பயனில்லாமல் போனதால் நொந்தேன்
ஆசைதீர மார்க்கஞ் சொல்லுவாய்
இந்த-ஆரண்யத்தில் என்னுடனே வந்தஜெய
(தந்திரனே. (ஆ)

---

ஸ்ரீ. மித்திர! நீ சொல்லிய பிரகாரம் குளத்திற்குச் சென்றேன் தாகந்தீர்ந்ததும் அங்கிருந்த சலவைக் கல்லின்மீது சற்று இளைப்பாற அமர்ந்தேன். அச்சமயம் மின்னலைப் போன்ற ஒரு பைங்கிளியாள் வந்து அங்கு நிறைந்துள்ள புஷ்பங்களைப் பறித்துக் கொண்டிருந்தாள், கண்ணுற்றேன். அம்மாதைப் பார்த்ததும் பிரமைகொண்டவனாகி அருகிற்சென்று அவள் வரலாற்றை விசாரித்தேன். கடைசியாக என் மனம் வாதையடையும்படி மறைந்து விட்டாள். அந்தச் சுகுமாரியை இன்னும் ஒருமுறை பார்த்து மணஞ்செய்யும் வரை என் மனம் ஒருங்கு சேராது. ஆகையினால் நீ எந்தவிதத்திலும் தகுந்த ஏற்பாடுகளைச் செய்து இந்தக் கன்னிகா ரத்தினத்தை எனக்கு மங்களதாரணம் செய்து வைக்கும்படி உன்னிடம் விரும்புகிறேன்.

ஜெய. நாம் வேட்டையாடிய களைப்பால் நொந்த தாகத்தைத் தீர்த்தபலனா? இது வாருங்கள் நம்முடையராஜ்யத்திற்போய் இதைப்பற்றி யோசிக்கலாம்.

ஸ்ரீ. இதைப்பூர்த்தி செய்கிறேனென்று வாக்குறுதி சொன்னால் மட்டும் உங்களோடு வருவேன். இல்லையேல், கண்டிப்பாய் வர முடியாது.

ஜெத. பேஷ் நன்றாயிருக்கிறது. இதுதானா உத்தம க்ஷத்திரியரின் நீதி? நம்முடைய அந்தப்புர ஸ்திரிகளைவிட என்ன? நம்முடைய இராஜ்யத்தில் இதைப்போல் யெத்தனையோ ஸ்திரிகள் இருக்கலாம். அவர்களைப் பார்த்த மாத்திரத்தில் ஆசைப்படுகிறதா? வேண்டாமிந்த வீண் எண்ணம். இது விஷயத்தில் நான் எள்ளளவும் பிரியமில்லாதவனாக யிருக்கிறேன். வாரும் போகலாம் நம் இராஜ்யத்திற்கு.

(கபர தரஹா.)

ஸ்ரீ. சென்று வருவீர் சீக்கிரமாகவே நீங்கள் (செ)

சித்தினியைக் கைக்கொள்ளாமல் இத்ததி நான்
(வரமாட்டேன் (செ)

இவளைப்போ லொருமாதை பார்ப்பது கஷ்டம்
இதைவிட்டகன்றிடிலோ நடக்காதென்னிஷ்டம்
எந்திழையாளை யிங்கு பார்த்திட்ட அதிர்ஷ்டம்
எத்தனைநீ யுரைத்தாலும் அத்தனையு முடியாது (செ)

ஜெத. நியாயமாகுமா வாதனை சாதனை வேண்டாம் (நி)

வந்தவேலை தீர்ந்தது நாம் சென்றிடுவோம்
(வந்திடுவீர் (நி)

வேட்டையாட வந்ததின் பலனிதோ சொலுவீர்
வேண்டாம் வீண்வாதுரை முடியாது வருவீர்
வீண்பாவம் வந்துசேரும் எனக்குறை தருவீர்
வாதனை சோதனை வேண்டாம் சாதனை நீர்
(செய்யவேண்டாம். (நி)

ஜெத. ஐயனே! தாங்கள் சொல்லியது என்னால் முடியாத காரியமே. ஏனென்றால் யுவராஜாவாக யிருக்கும் தாங்கள் இப்படி ஏதாவது ஒரு விஷயத்திற் புகுந்தால் நமது இராஜ்யத்திற்கே ஏதாவது தீங்கு நேர்ந்தாலும் நேரும். இதைத் தவிர வேறு என்ன கட்டளை யிட்டாலுஞ்செய்யச் சித்தமாயிருக்கிறேன். செல்லலாம் வாருங்கள்.

ஸ்ரீ. க்ஷத்திரிய குலத்திற் பிறந்த மன்னனுகை விருந்தும் கேவலம் இந்த அற்ப விஷயத்தில் பின் வாங்கலாமா? இன்னுமொரு முறை இவ்விதம் உரைப்பீராகில் என் கோபத்திற்காளாகுவீர் உம்மால் இக்காரியத்தை முடிக்க முடியாதே?

ஜெத. கண்டிப்பாய் முடியாது.

ஸ்ரீ. அப்படியானால் நீர் சென்று வாரும்.

ஜெத ஆஹா! என்னபிடிவாதம் நான் எவ்வளவு தூரம் எடுத்துச் சொல்லியும் அவர் சொன்னதையே மாறிமாறிச் சொல்லுகிறார். ஐயனே! கட்டாயம் முடித்துத்தான் தீரவேண்டுமோ?

ஸ்ரீ. முடித்தே தான் தீரவேண்டும்.

ஜெத. அரண்மனைக்குச் சென்றதும் கட்டாயம் முடித்து வைக்கிறேன்.

ஸ்ரீ. உண்மையாக?

ஜெத. முக்காலு முண்மையே.

ஸ்ரீ. அப்படியானல் வாருங்கள் போகலாம்.

[எல்லாரும் சென்று விட்டார்கள்.]

## 7-வது களம்.

## ஸ்ரீதரன் சபை.

ஜெத. ஐயனே! நமஸ்கரிக்கிறேன்.

ஸ்ரீ. ஜெயதந்திரரே! அமருவீர். மனோஹரி விஷயத்தில் ஞாபகமிருக்கிறதா?

ஜெத. ஐயனே! தாங்கள் என்னிடம் கேட்டுக் கொண்ட பெண் மணியைப்பற்றியா?

ஸ்ரீ. தெரிவிக்கிறேன்:—

விருத்தம்.

அற்புத குணம்நிறைந்த அவள்நகர் இதுவேயாகும்
விற்பன மானமாதின் குலமும்பார்ப் பனரேயாகும்
கற்புடை யாளின்தாயார் கமலதே வியரேயாகும்
நற்புறு மணியாள்தந்தை நான்சொலும் பரசுராமன்.

ஸ்ரீ. நான் சொல்லிய மங்கையின் இருப்பிடம் சந்திராபுரி. தாயின்பெயர் கமலதேவி. தந்தையின் பெயர் பரசுராமன் அவள் பெயர் மனோஹரி வேதியர் குலத்தில் பிறந்தவள்.

ஜெத. சீக்கிரமாகச் சென்று முடித்து விட்டு வருகிறேன்.

---

## 8-வது களம்.

### பரசுராம ஐயர் வீடு.

சேவ. வேதியரே! எங்கள் அமைச்சர் வந்திருக்கிறார்.

பர. யார்? ஜெயதந்திரரா? வந்திருக்கிறார்?

பர. ஜெயதந்திரரே! நமஸ்கரிக்கிறேன். அமருங்கள்.

ஜெத. வேதியரே அமருங்கள்.

நான் வந்த காரியம் சொல்லுகிறேன். தெரிந்து கொள்ளுங்கள்.

பா. தெரிவியுங்கள்.

ஜெத. நான் சொல்லுகிற விஷயத்தில் யாதொரு ஆக்ஷேபனையுஞ் செய்யாமல் முடிப்பதென்றால் தெரிவிக்கிறேன்.

பா. மந்திரி வார்த்தைக்கு மறுவார்த்தையு முண்டா. முடியக்கூடிய சங்கதியா யிருந்தால் முடிப்பதில் என்ன தடை. தெரிவியுங்கள்.

ஜெத. அதுவும் உண்மையே தெரிவிக்கிறேன்.

பா. தெரிவியுங்கள்.

ஜெத. சந்திராபுரியை பரிபாலித்து வரும் நமது மாக்ஷிமை தங்கிய ஸ்ரீதரரும் நானும் வில்லாளிகளுமாக வேட்டைக்குச் சென்று வரும் வழியில் தாகத்தால் நொந்த நமது மன்னன் தண்ணீரருந்த எங்களை ஓரிடத்தில் நிறுத்தி விட்டு பக்கத்திலுள்ள சோலையின் நடுவேயுள்ள மடுவிற்சென்று தாகமருந்திய பின் களைப்பால் சற்றுச் சலவைக் கல்லின் மீது அமர்ந்தனராம். அவர் முன்னிலையில் யாரோ ஒரு பெண்மணி வந்தனராம். கண்ணுற்றவர் சமீபத்திற்சென்று ஊர், பெயர், முதலியவற்றை வினவினராம். அதன் பின்னர் அம்மங்கையை எவ்விதத்திலும் மணமாலை முடிக்க வேண்டுமென்று போவாவுடன் அன்னம் முதலியவைகளை வெறுத்து தவிக்கிறார். இன்னாரென விசாரித்ததில் அம்மங்கையின் பெயர் "மனோஹரி" தாயார் பெயர் கமலதேவி தந்தை பெயர் பரசுராமர் இருப்பிடம் சந்திராபுரி நகரில் என்றார். இது தான் விஷயம்.

பா. ஜெயதந்திரரே! தாம் சொல்லிய அடையாளங்கள் முற்றிலும் என்னைக் குறித்ததே இதைக் கேட்டது முதல் என் மனம் வாதையடைகிறது. ஏனென்றால், குழந்தைக்கு விவாஹம் நடந்து ஆறு மாதகாலமாய் விட்டன. மேலும் நீங்கள்

க்ஷத்திரிய குலம் நீங்களிதைப் பற்றி எங்களிடம் கேட்ட தேபிசகு.

> "அறனிழுக்கா தல்லவைநீக்கி மறனிழுக்கா மானமுடைய தரசு".

என்றபாடத்தை மறந்து விட்டார் போலும் கொடுங்கோல் மன்னர் வாழும் நாட்டில் கடும்புலி வாழும் காடு நன்றே. என்றபடி, இந்த இராஜ்யத்தை விட்டு அகலுவதே நியாய மென எண்ணுகிறேன்.

ஜெத. ஏன் விசனிக்க வேண்டும். "கோபம் சண்டாளன்" கோப மே பாவங்களுக்கெல்லாம் தாய் தந்தை என்ற நூலை நீங்க ளறிந்த விஷயந்தானே.

விருத்தம்.

கோபத்தாற் கௌசிகன் தவத்தைக் கொட்டினன்
கோபத்தாற் நகுஷனுங் கோலம் மாற்றினன்
கோபத்தாற் இந்திரன் குலிஜம் போக்கினன்
கோபத்தால் இறந்தவர் கோடி கோடியே.

---

இவர்கள் மட்டுமா. இன்னும் யெத்தனையோ பேர். கோபத் தைத் தணித்துக் கொள்ளும்.

பா. நல்ல வார்த்தை தெரிவித்தீர். நீர் சொல்லிய விஷயம் முற் றும் யார் தான் கேட்டுச் சகிப்பார்கள். போதும் போதும் சீக்கிரமாகச் சென்று வாரும். இது விஷயத்தில் எள்ளளவு கூட நான் கேட்க முடியாது. ஏனென்றால் என் புத்திரிக்கு விவாகம் நடந்து ஆறுமாதமாய் விட்டது. இன்னும் சில தினத்தில் சடங்கு முகூர்த்தம் செய்ய வேண்டியதாமதமே ஒன்று. ஆகையால்; இதுவிஷயத்தில் நான்கொஞ்சமும் பிரி யமில்லாதவனாக விருக்கிறேன். தயவு செய்து யென்னை வா தைப் படுத்தாமல் சென்று வாரும். விடை தந்தேன்.

ஜெக. இன்னுமோர் கடைசி வேண்டுகோள்; உங்கள்ஜாதி முறைப் படி மனோஹரியைச் சிறு வயதிலேயே விவாகஞ் செய்து கொடுத்து விட்டீர்கள். அதை அறிந்த மன்னனே கலியா ணஞ் செய்து கொள்ளுகிறே னென்று சம்மதிக்கும் பொழு து தாம் ஏன் கவலைப்பட வேண்டும். மேலும் நமது ஸ்ரீ தரரோ யௌவனபருவத்தை யுடையவர். இன்னும் அவரு க்கு விவாகமே ஆகவில்லை. கேவலம் ஏழைப்பார்ப்பானைக் கட்டி கஷ்டப்படுவதைப் பார்க்கிலும் இப்படிப்பட்டபெரிய ராஜாங்கத்தை அடுத்து இருந்தால் எவ்வளவு சுகம்.

பா. என்ன வார்த்தை தெரிவித்தீர்.

இராகம்—சுருட்டி. தாளம்—ஆதி.

பா. போம் போம் இதுவும் நினைவா
புகவில்லையோ புத்தியில்லையோ கனவா
அநியாயமாக வந்து அதட்டியே நீர் மொழிந்தீர்
ஆறுதல்கொண்டவர்போல் தேறுதலாய் மகிழ்ந்தீர்
ஆகாது ஆகாதிது போய் வாரும் நீரிப்போது (போ)

ஜெக. கோபமும் கொள்ளலாகுமா
வேதியரே கோபமும் கொள்ளலாகுமா
ஜாதிமதங்களென்று நானென்றுங் கூறவில்லை
ஓதியமன்னன் சொல்லை சொன்னதேவேறென் (றில்லை
வாதுபேசாமல் நீரும் உறுதிமொழியைத்தாரும் (கோ)

ஜெக. பணம் பாதாளம் வரை எட்டும் என்பதை நீர் அறிந்தில்லை போலும். இவ்வுலகத்தில் எத்தனையோ கன்னிகா ரத்தினங் கள் இருக்கும் பொழுது உமது புத்திரியின் மீது அவர் கா தல் கொள்ளுகிறதற்கு ஏதாவது ஒரு காரணம் இருக்கவே ண்டும். கன்னிகாதானம் செய்திருந்தால் முடியாதென்றால்

என்ன? இதற்காக ஏன் வாயில் வந்தபடி கோபிக்க வேண்டும்.

பா. இந்த வார்த்தை எனது உறவு முறையார் கேட்கும் பக்ஷத்தில் அளவு இல்லாது வருந்தி என்னையும் இனம் நீக்கி விடுவார்கள். இது தான் யோசனை.

ஜெத. அப்படிச் சொல்லும். உமது புத்திரியை எங்கள் அரசனுக்கு மணமாலை சூட்டி விட்டால் இந்த சந்திராபுரி ராஜ்யத்தில் பாதியை உமக்கும் பாதியை உமது புத்திரிக்கும் தாரை வார்த்துக் கொடுக்கும்படி செய்கிறேன்.

பா. உமதிஷ்டம் இதைவிட நான் உமக்கு என்ன நீதியை எடுத்துரைக்கப் போகிறேன். உமது எண்ணம் போல் முடித்துக் கொள்ளலாம் சென்று வாரும்.

ஜெத. இதில் யாதொரு மாறுதலில்லையே.

பா. மாறுதலென்ன! அதுவும் உமது மன்னனிடத்திலா! இந்த ராஜ்யபாரத்தை எனக்கும் என் புத்திரிக்கும் தாரை வார்த்துக் கொடுப்பதில் ஏதாவது சந்தேகமிருந்தால் இதிலும் சந்தேகந்தான். சென்று வாரும்.

ஜெத. சென்று வருகிறேன்.

---

## 9-வது களம்.

## ஸ்ரீதரனிடம்.

ஜெத. ஐயனே! நமஸ்கரிக்கிறேன்.

ஸ்ரீ. ஜெயதந்திரரே மங்களமுண்டாக போன காரியஞ் ஜெயந்தானே.

ஜெத. தெரிவிக்கிறேன்.

இராகம்—அடாணா. தாளம்—ரூபகம்.

ஸ்ரீ. மந்திரியே ஜெய தந்திரியே யங்கு
சென்ற விஷயத்தைச் சொல்லுவீர்.

ஜெத. மங்களமாகவே முடித்து யிங்கு வந்தேன்
மன்னவரே யிங்கு அமருவீர்

ஸ்ரீ. இதுவும் உண்மைதான்! என்னிடம் இப்போது
சத்தியஞ் செய்துவாய் நின்று

ஜெத. ஈஸ்வரன் சாக்ஷியாய் யாவையும் உண்மையே
செய்தேன் நான் சத்தியமின்று

ஸ்ரீ. எந்தவிதமாக இதை முடித்து வந்தீர்
என்னிடம் சொல்லு மிப்போது

ஜெத, நீர் ஏக்கங்கொள்ளவேண்டாம் ராஜ்யபாரத்தை
தாரை வார்ப்பதா யிப்போது

---

ஜெ. ஐயனே! நான் சென்று எவ்வளவோ எடுத்துக் கூறினேன். அவர் என்னை விசனித்து மறுத்துவிட்டார். அதன் பிறகு பலநீதிகளைப் புகட்டி ஒருவாறு சம்மதித்து விட்டார். இனி மேல் விவாகத்திற்கு வேண்டிய சகல ஏற்பாடுகளையும் செய்யவேண்டியதிருப்பதால் விடை தாருங்கள்.

(சபர தரஹா.)

ஸ்ரீ. சென்று வருவீர்
சீக்கிரமாகவே சென்று பாக்கியில்லாமல்முடிக்க (செ)

அரண்மனை முற்றிலும் மணவரைப் பந்தல்
அழகு நிறைந்த பல குளோப்புடன் லாந்தல்

எங்கு பார்த்தாலும் வாழைக் கமுகுகள் ஈந்தல்
எத்தனை செலவானாலும் மித்திரா நீ கேட்க
வேண்டாம் (செ)

நாலுரத வீதியும் தோரணம் நாட்டி
நமது ஜெயக் கொடிகள் பேரிகை பூட்டி
நண்பர் வரும் வழியில் கோலங்கள் தீட்டி
நாடு நகரரிந்திட மார்க்கமதைச் செய்திடவே (செ)

---

ஸ்ரீ. ஜெயதந்திரரே! நமது ராஜ்யத்திலுள்ள சகல இடங்களிலும் தோரணங்கள் கட்டி அழகுடன் சிங்காரித்து ஏழை கூன் குருடு செவிடு இவர்கள் போன்றவர்களுக்குத் தகுந்த ஆடைகளையும் உணவுகளும் தயார் செய்துவிட்டு வாரும். நமக்குள்ளடங்கிய சகல சிற்றரசர்களுக்கும் "திருமணப் பத்திரிகைகளை அனுப்பி அவர்களுக்குத் தகுந்த வசதிகளையும் ஏற்பாடு செய்யும்.

ஜெத. அப்படியே செய்து வருகிறேன்.

ஸ்ரீ. சென்று வாரும்.

---

## 10-வது களம்.

### ஸ்ரீதரனுக்கும் மனோஹரிக்கும் மேளவாத்தியத்துடன் கலியாணம்.

விருத்தம்.

எத்தனை தவஞ் செய்தேனோ ஏந்திழை தன்னைக்கொள்ள
அத்தனை கஷ்டங்கொண்டு மடைந்தயென் பாக்கியமெந்தன்
சித்தமுங் கலங்கிடாமல் செயதந்திரன் தந்திரமென்ன
இத்தினம் கவலை தீர்ந்தேன் ஏந்திழை மாதினாலே.

ஸ்ரீ. நான் கொண்ட பாக்கியமே பாக்கியம். இம்மாதை நான் மனையாளாகக் கொள்வதற்குத் தகுந்த சகாயஞ் செய்து

முடித்துவைத்த ஜெயதந்திரனின் பெருமையை என்னவென்று சொல்லுவேன். இவருக்குக் கைமாறு என்ன செய்யப் போகிறேன். ஜெயதந்திரரே மெச்சினேன். உமது சாமர்த்தியத்தை. வாருங்கள் எல்லாரும் அந்தப்புரத்திற்குள் செல்லலாம்.

---

## 11-வது களம்.

### ஸ்ரீதரன் சபை.

ஸ்ரீ. மந்திரியாரே! யென் பத்தினியாளுக்கு இது கர்ப்பமாதமாகையால் சகலருக்கும் தானம் தருமங்கள் செய்யும்படி வேண்டும் ஏற்பாடுகள் செய்து வாரும்.

ஜெத. அப்படியே செய்து வருகிறேன்.

சேடி. ஐயனே! அம்மணி வயற்றில் ஓர் ஆண் குழந்தை பிறந்திருக்கிறது.

ஸ்ரீ. சென்று பார்க்கிறேன்.

---

## 12-வது களம்.

### சந்திராபுரி.

[தீர்த்த யாத்திரை சென்ற விஜயாகரன் சந்நியாசி கோலத்துடன் வந்து புலம்புகிறான்]

விஜ. ஆஹா! நான் தீர்த்த யாத்திரை செய்து வந்ததின் பலனா இது. தந்தைசொல் மீறிச் சென்றதின் தண்டனை இதுபோலும் முப்பத்து முக்கோடி தேவர்களறிய அக்கினி சாக்ஷியாக மணமுடித்த என்னருமைப் பத்தினியாக "மனோஹரியை காமத்தின் ஆசையினால் தான் இரண்டாவது மணந்திருக்கிறான். கைக்கெட்டியது வாய்க்கெட்டாமல் போய்விட்

டது. இதை அறிந்து தான் என் தந்தை தடுத்துரை செய்தார் போலும்" இளங்கன்று பயமறியாது என்னும் பழமொழி யெனக்கே அமைந்தது.

"அறனிழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா
மானமுடைய தரசு"

என்ற நீதியை மறந்து கொடுங்கோலரசு புரிந்திருக்கிறான். இவன் பெண்டு பிள்ளையுட னிருந்து சுகமாய் வாழுவானே? ஒருக்காலும் வாழமாட்டான். பாழும் நரகத்திற்கே ஆளாகுவான். இந்த ஏழைப்பார்ப்பான் பாவம் இவனையும் பீடிக்காதா? இருக்கட்டும். அந்த அரசனிடமே சென்று விசாரிக்கிறேன்.

---

## 13-வது களம்.

### அரசனிடம்.

ஸ்ரீ. தாங்கள் யார்?

வி. நான் ஒரு சந்நியாசி க்ஷேத்திரங்களுக் கெல்லாஞ் சென்று தீர்த்தமாடி பிரசாதம் கொண்டு வந்திருக்கிறேன். இப்பாழும் பிரபஞ்சத்தின் ஆசை இன்னும் நீங்காததால் தங்களைத் தெரிசித்து ஏதாவது சன்மானம் பெற்றுக் கொள்ளலாமென இங்கு வந்தேன்.

ஸ்ரீ. அப்படியா ரெம்ப ஆனந்தித்தேன். தீர்த்தந்தாருங்கள் பெற்றுக் கொள்கிறேன். சேவகா! அந்தப்புரத்திற்கு அழைத்துக் கொண்டு போய், என் பத்தினிக்கும் தீர்த்தம், கொடுக்கும்படி செய்வதுடன், இவருக்கும், தகுந்த மரியாதை செய்து அனுப்பும்படித் தெரிவி.

சேவ. அப்படியே செய்கிறேன்.

வி. சென்று வருகிறேன்,

ஸ்ரீ. சென்று வாருங்கள்.

---

## 14-வது களம்.

### மனோஹரி யிடம்.

சேவ. அம்மணி' ஒரு சந்நியாசி தீர்த்தங் கொண்டு வந்திருக்கிறார் அவரைத் தெரிசித்து, தீர்த்தமும், ஆசீர்வாதமும், பெற்றுக் கொள்ளும்படி., நமது அரசன், கட்டளை யிட்டார்.

ம. அப்படியா? பெற்றுக் கொள்ளுகிறேன். நீ சென்று வா.

[விஜயாகரன் வருகிறான்]

ம. சுவாமி! நமஸ்கரிக்கிறேன்.

வி. தாயே! நீ மங்களகரமா யிருப்பாய். இதோ தீர்த்தம் பெற்றுக்கொள்.

ம. தாருங்கள் சுவாமி.

வி. அம்மணி! உமது நாமதேயம் என்னவோ?

ம. என்னை மனோஹரி என்பார்கள்.

வி. என்ன! மனோஹரியா?

ம. அதென்ன அவ்வாறு ஏங்குகிறீர்கள்.

வி. இல்லை; என் பத்தினியின் பெயரும் மனோஹரி தான். அது தான் அவ்வாறு ஏங்கினேன்.

ம. உமது மனைவியார் இப்பொழுது எங்கே யிருக்கிறார்?

வி சென்றவிடம் அறியேன். அவள் பிரிந்ததினாலேயே, இவ்வித கோலத்திற்கும் ஆளானேன்.

(தந்திவோய்)

ம. உமது ஊர் எதுவோ?

வி. என்னூர் மதனபுரி.

ம. உமது பெயரைச் சொல்வீர்?

வி. என் பெயர் விஜயாகரன்.

ம. என்னை அறிந்திலரோ?

வி. அறிந்ததா லிங்கு வந்தேன்.

ம. அடையாளந் தெரிந்திரோ?

வி. அதனுல் நான் எரிந்தேனே.

ம. அது விபரம் துரிதமுடன் உரைத்திடுவீர்.

வி. அதிவிரைவாய் இதுசமயம் உரைத்திடுவேன்.

ம. ஆனுல் சொல்லிடுவீர்.

---

இராகம்—ஸ்ரீராகம். தாளம்—ஆதி.

பல்லவி.

வி. யாத்திரை செய்து வந்தேனே
அநாதி நானே (யா)

அநுபல்லவி.

மனோஹரி எனுமாதை
மணந்த பின் நடந்தேன் பாதை
வந்து பார்த்தே னம்மாதை
நொந்தே னில்லாததால் வாதை (யா.)

வி. நான் சிறியவனாக விருக்கும் பொழுது எனக்கு மனோஹரி என்னும் ஓர் கன்னிகையை மணமாலை சூட்டி வைத்தார்கள். சில தினங்களித்து தீர்த்தயாத்திரை செய்துவர விடைபெற்றுச் சென்றேன் நேற்றுத்தான் என் நகர்வந்து சேர்ந்தேன் என் சுற்றத்தார் ஒருவரையும் காணவில்லை. அம்மங்கையையும் காணவில்லை. அதனால் தான் இவ்வித கோலத்திற்கும் ஆளானேன்.

(இஸ்ஃ புரஞ்ஜாலே)

| | | | |
|---|---|---|---|
| ம. | மனோஹரி நான்தானே | நீரறிவீரே | |
| | சங்கை யில்லாத | மன | |
| | மங்கை உண்மையுடனே | நானே. | (ம.) |
| | யாத்திரை செய்யத் | தொடுத்தீர் | |
| | சத்தியம் | விடுத்து | |
| | வந்த வகை | கூறுவீர் | |
| | எந்தன் குறை | தேருவேன் நானே. | (ம.) |

---

ம. ஐயா! தாங்கள் எந்தமனோஹரியால் இவ்வித கோலத்திற்கு ஆளானேன் என்றுரைத்தீர்களோ! அந்த மனோஹரியாள் நானே. தாங்கள் யாத்திரை சென்றதற்குப்பின் நடந்த விஷயங்களைப்பற்றித் தெரிவிக்கிறேன். கேளுங்கள்.

வி. மனோஹரி! இங்குநீ எப்படி வந்தாய் தெரிவி.

ம. தெரிவிக்கிறேன். என் தந்தை வீடு வந்து பருவதிசையடைந்த சில தினங்களுக்கெல்லாம் ஜலக்கிரீடை செய்து புஷ்பங்கள் எடுத்துவர:—

இராகம். விருத்தம். தந்நியாசி.

ம. கன்னிகை யொருநாளந்த கமழ்தரும் கதம்பங் கொய்ய
உன்னியே சென்றேனங்கு ஒருவருமில்லா வேளை

தன்னிலையறியா வேந்தன் தடித்தென்னை வழிமறித்து
கன்னிகா தானஞ்செய்ய கடிமொழி யுரைத்து நின்றார்.

---

ம. அந்த வார்த்தையை கேட்டதும் வேரற்ற மரம்போல் விழுந்து புலம்பினேன். அதைச்சிறிதும் உணராமல், மீண்டும் வற்புறுத்தினர். கண்டிப்பாய முடியாதென்று மறுத்துவிட்டுச் சென்றேன். சில தினங்கழித்ததும் என் தந்தையிடம் இவருடைய மந்திரி வந்து இந்த ராஜ்யத்தை, உமக்கும், உமது புத்திரிக்குமாக தானம் வார்த்து விடுகிறோம், கட்டாயம், மனோஹரியை இந்த மன்னனுக்கே, திருமணஞ்சூட்ட வேண்டுமென்று வற்புறுத்தினர். 'பணம் பற்றி மணமா குணம் பற்றி மணமா' என்பதைக் கொஞ்சமும் உணராமல் என் தந்தையும் சம்மதித்து என்னை எமன் கையில் கொடுப்பதுபோற் பிடித்துக் கொடுத்து என்னுடைய கற்பையுமழித்துவிட்டார். வெந்நீரில்விட்ட மீனைப்போல் பரதவித்தேன் இதுதான் விஷயம். ஓர் புத்திரனையும் பெற்றெடுத்திருக்கிறேன்; அவனுக்கும் வயது 1 ஆகிவிட்டன. அவனை சந்திரகாசன் என்று சொல்லுவார்கள்: இவைகளைத்தவிர எனக்கு வேறொன்றும் தெரியாது.

## விஜயாகரன் விசனிக்கிறான்.

வி. ஆஹா! என்ன கொடுமை, என்ன கொடுமை! க்ஷத்திரியனென்றும், பிராமணனென்றும், உணராமல் பணத்தின், பேராசையினால் இப்பெரும் பதகத்திற்குச் சம்மதித்தார் போலும். முப்பத்து முக்கோடி தேவர்களறிய, அக்கினி சாக்ஷியாக, மணந்த உன்னை, மதிநிலையறியாத மகாபாதகனுகிய இந்த "ஸ்ரீதரனும்" இதற்கு முன்னின்றானே சண்டாளன்! இவன்குடும்பம் தழைக்குமா? இருக்கட்டும். நான் வந்து ரொம்ப நேரமாய்விட்டது.சென்றுவருகிறேன் ஏ கருணாகரா! நீயே துணை! உன்னை விட்டுப் பிரியவும் என் மனஞ்

சம்மதிக்க வில்லையே! மனோஹரி இவ்வளவு சம்பவங்களை கண்ணால் பார்த்தும், காதாலுணர்ந்தும், இனிமேல் ஒரு விநாடியாவது நான்உயிருடன் வாழலாமா? இருப்பதைவிட இறப்பதே மேல்.

ம. இவர் சொல்லுவதும் வாஸ்தவந்தானே. இருக்கட்டும் இவர் தானே என்னை மாலையிட்டவர். இவர் துன்பம் அநுபவிக்கவும், இந்தப் பாவியாகிய மனோஹரி இன்பமாய் வாழவுமா? நானும், இவருடனே என் உயிரைவிடக் கூடாது. நான் ஒன்று சொல்லுகிறேன் கேளும், இன்னும் சிறிது நேரஞ் சென்றால் சந்திரகாசன் வந்து விடுவான். ஆனதால்:—

இராகம்—தந்நியாசி. தாளம்—ஆதி.

பல்லவி.

ம. நீர் கொஞ்சமும் கலங்க வேண்டாம்
மிஞ்சியே தியங்கவேண்டாம்
சென்று நீர் வருவீரே. (நீர்)

அநுபல்லவி.

அஞ்சாமல் விரைவாய் ஓடி
ஆரணிய வழியை நாடி
ஆலயமுண்டதிற்கூடி அமர்ந்திருப்பீரே தேடி (நீர்)

இரவுநற்சாமவேளை இங்கிருக்குமன்னன் தலை
இரண்டுதுண்டாகவதை செய்திடுவேன்படுகொலை (நீர்)

ஓங்கியநல் ஆரண்யத்தில் உதித்ததோர் ஆலயத்தில்
தங்கியேஉறங்கிடுவீர் பாங்கியும் வந்துமேநிற்பேன் (நீர்)

---

ம. நீர் துயரப்படுவதைக் கண்ணுற்றதும் என் மனம் வாதையடைகிறது. இனிமேல் இந்தப்பாதகனிடமிருந்து வாழவும்

வேண்டுமா? நீர் ஒருவருக்கும் தெரியாமல், இந்த நகருக்கு அடுத்த, ஆரணியத்திற்குச் சென்று, அங்கிருக்கும் ஆலயத்திற்குப்போய் நித்திரைசெய்து கொண்டிரும் நானும், என் புத்திரனுமாக, இன்றிரவு நடுச்சாமத்தில் அந்தஇடத்திற்கு வருகிறோம். அதன்பின் வேறு எந்த ராஜ்யத்திற்காவது சென்று நமது வாழ்நாளைக் கழிக்கலாம்.

வி. கண்மணி! இது உண்மைதானா?

ம. உண்மையே!

வி. நீ சொல்லிய காலம் வரை பார்ப்பேன் நீ வரவில்லையானால் என்னுயிரை விட்டு விடுவேன்.

ம. சந்தேகம் வேண்டாம் சென்று வாருங்கள்.

(இட்டவிதிப்படி முற்றுமதைப்புவி.)

| | | |
|---|---|---|
| வி. | சென்று வருகிறேன்<br>தேவி | சென்று வருகிறேன்<br>மனோஹரியே |
| ம. | சீக்கிரமாகவே<br>நாதா! நாதா! | வந்து நான் சேருவேன்<br>நான் வருவேன் முண்மையாய் |
| வி. | உண்மைதானாயிது<br>ஓதுவாய் | உண்மைதானாயிது<br>என்னிடமே |
| ம. | உத்தமனே மனம்<br>வாரேன் வாரேன் | இற்றுநோக வேண்டாம்<br>வாக்குறுதி உண்மையாய் |
| வி. | பத்தினியாளே நான்<br>படித்து | இத்தினமேகியே<br>அயர்ந்திடுவேன் |
| ம. | பர்த்தாவே எகுவீர்<br>கோயில் போவீர் | முத்திவிநாயகர்<br>துரிதமாய் நேராகவே |

[விஜயாகரன் சென்று விட்டான்.]

## 15-வது களம்.

## பள்ளியறை.

[ஸ்ரீதரன், மனோஹரி, சந்திரகாசன், இந்த மூவரும், ஒவ்வொரு மஞ்சத்தில் நித்திரை செய்கிறார்கள்.]

ம. விஜயாகரரும் என் சொல்லை நம்பிச் சென்று விட்டார். ஸ்ரீதரரும் சந்திரகாசனும் அயர்ந்து நித்திரை செய்கிறார்கள். இது தான் சரியான சமயம் ஒருவேளை சந்திரகாசனை எழுப்பும் பொழுது, அவரும் விளித்துக் கொண்டால், என்ன செய்கிறது. நான் செல்லாவிடில் அவரும் உயிரை மாய்த்துக்கொள்ளுவார், ஒரு யோசனை புலப்படுகிறது. இவரையுங் கொன்றுவிட்டு இந்தச் சந்திரகாசனை இங்கே தனியாய்விட்டுச் சென்றால் தான் நமது காரியம் முடிவு பெறும் என்று எண்ணுகிறேன். சந்திரகாசனை என்கூடவே அழைத்துச் சென்றால் ஏதாவது துன்பம் நேர்ந்தாலும் நேரும். இதோ இந்த உடைவாளால் இவர் தலையை வெட்டுகிறேன்.

[ஸ்ரீதரன் தலையை இருதுண்டாக வெட்டி விடுகிறான்.]

ம. நான் அறியாதபடி இவர் தலையை இருதுண்டாக வெட்டி விட்டேன். சந்திரகாசனோ அயர்ந்து நித்திரை செய்கிறான். என்னை அறியாமலே என் மனம் வாதையடைகிறது. ஏனென்றால் புத்திரனைப் பிரிந்து செல்லப் போகிறேனே என்ற எண்ணந்தான். கண்மணி! சந்திரகாசா! உன் முகத்தை, இனிமேல் எப்பொழுதடா பார்க்கப் போகிறேன்.

[அருகிற் சென்று முத்தமிடுகிறாள்.]

நாளிகையாய்விட்டது. ஒரு வேளை வேறு, யாருக்காவது, தெரிந்தாலும் தெரிந்துவிடும் ஆனதால் இவ்வுருவத்தை

மாற்றி சந்நியாசி வுருவெடுத்துச் செல்லுகிறேன்.

[மனோஹரி சென்று விட்டாள்.]

## பிள்ளையார் கோயில்.

[விஜயாகரன் சயனித்திருக்கிறான் எழுந்து,]

(நீர் நிலம் வளம் பார்க்க வேணும் பிதா..)

வி. என் ஆசை மனோஹரியைக் காணிலேன்
ஆரண்யமீதுள்ள ஆலயமருகினி லிருமென்ற (ஆ)

நல்ல இருளாச்சே நடுங்கும் காலமாச்சே
நானென்ன செய்குவேன் நாடியேவாடுறே
னிப்போது. (ஆ)

என்னை மறந்தவள் அங்குமிருப்பாளோ
எந்திழை மாதிங்கு ஏகி நடப்பாளோ
ஏதும் அறியேனே வாதையால் இதுததிகலங்கினேன் (ஆ)

கரடி சிங்கம் புலி வந்தால் என் செய்குவேன்
கால்கைகள் நொந்திங்கு வாதையால் உய்குறேன்
கானகமானதால் கலங்கியே மனமதுநொந்திட்டேடேன் (ஆ)

---

வி. ஏ மனோஹரி! இன்றிரவு நடுச்சாமத்திற் கெல்லாம் வருகிறேன் என்று உறுதிமொழி சொல்லிய நீ, என்னை மறந்து இருந்துவிட்டாயோ. உன்னைக்காணுமல் என்மனம்பரதவிக்கிறதே ஏ சோமசுந்தரக்கடவுளே! நீயே கதி. அலுப்பு அதிகமானதால், இந்த ஆலயத்தில், இன்னும் கொஞ்ச நேரம் நித்திரை செய்கிறேன்.

[விஜயாகரன் மீண்டும் படுத்துக் கொண்டான்.]

[ஒரு நாகப்பாம்பு அந்த வழியில் வருகிறது.]

## நாகப்பாம்பு விஜயாகரனைத் தீண்டுதல்.

வி. ஹா! ஹா!! என்ன செய்யப் போகிறேன். நான்,

### புலம்புதல்.

(நீயே சகாய மென்ன)

வி. அயர்ந்து நான் உறங்கும் வேளை—ஓர்
அரவமும் வந்தென் காலை
அண்டியே ஆலமதை விண்டதே.
கெட்டகுடியேகெடும் பட்டகாலிலேபடும்
இட்டமுடன் வளர்த்த சிவனுமறந்திட்டானே (ஆ)

இந்தவேளையில்வந்து நாதாவென்றுமொழிந்து
நொந்தயிப்பாதகனை பார்ப்பாளோ?
சொந்தமனை யிருந்தும் பந்தமில்லாமல் போக
அந்த அரனருள் அன்றிவேறொன்றுமில்லை (ஆ)

---

வி. ஆ மனோஹரி! நீ சொல்லியவாறு இந்த ஆலயத்தில் வந்து நித்திரைசெய்து கொண்டிருந்தேன். திடீரென்று ஒருநாகப் பாம்பு வந்து என்னைத் தீண்டி விட்டது. இந்த வேளை எனக்கு யார் உதவிசெய்யப் போகிறார்கள். ஏ! கருணாகரா கங்களா! கங்கைவேணியா! பூதநாதா! கைலயங்கிரிவாசா! பசுபதிநேசா! பார்வதி மனோஹரா! பாவமாம் பற்றினை அறவேநீக்க யான் தீர்த்த யாத்திரைசெய்து உன்னை தெரிசித்தபலனையிது இல்லை. என் தந்தை யிட்ட கட்டளையை மீறிச் சென்றேனே அதனால் வந்ததீதா. நான் யாருக்கு என்ன தீங்கை இழைத்தேன், என்மனமாற ஒருவருக்கும் துன்பத்தைக் கொடுக்க வில்லையே. தாய் இழந்து, தந்தை இழந்து, மனை இழந்து, நாடிழந்து, பாழும் மிருகங்கள்வாழும், இந்த

வனத்தில் வந்து பரதேசியைப்போல் பாதலிக்குறேனே. இதுவும் உனது திருவருளோ இருப்பதைவிட இறப்பது மேலல்லவா ஆனாலும்,

வெண்பா.

காதல் மனையாளும் காதலனும் மாறின்றித்
தீதில் ஒருகருமம் செய்பவே—ஓதுகலை
எண்ணிரண்டும் ஒன்றுமதி என் முகத்தாய்! நோக்கல்தான்
கண்ணிரண்டும் ஒன்றையே காண்.

---

என்ற முதுமொழி எனக்கே தகும் ஏ கண்மணி! என்னால் நிற்க முடியவில்லை கால் கைகள் பின்னலாடுகிறது. நேத்திர ஒளி குன்றிவிட்டது. பாம்பின் விஷம் உடம்பெங்கும்வாட்டுகிறது. இந்த வேளையில் என்னுயிர் பிறியப்போகிறது. ஏமனோஹரி! ஏமனோஹரி! ஹா! என்னுயிர் வாதனையடைகிறதே நீயே கதி.

[மனோஹரி ஓடிவருகிருள்]

ம. நாதா ஏன் இவ்வாறு புலம்புகிறீர்கள். நான் வருகிறேனென்று சொல்லிவிட்டு இந்தப்பாவி அந்தப்பாழும் அரண்மனையிலிருப்பேனே. ஒருக்காலுமிருக்கமாட்டேன் எழுந்திருங்கள்.

வி. ஏ மனோஹரி! வேரற்ற மரம்போலானேன் நீ சொல்லியவாறு இந்த ஆலயத்தில் வந்து நித்திரை செய்துகொண்டிருந்தேன். அடிக்கடி எழுந்து உன் வரவை எதிர்பார்த்துமனம் நொந்தேன். சிறிது நேரத்திற்கு முன்னால் நான் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தேன் அந்தச் சமயத்தில் திடீரென்று ஒரு நாகப்பாம்பு வந்து என்னை தீண்டிச்சென்றது இப்பொழுது என்னுயிர் பிறியப்போகிறது ஏ காதலி "புருஷனை நம்பி அரசனையும் கைவிட்டாய்" ஹா!

டார்ஸி நோட்.

ம. தெய்வமே தெய்வமே தெய்வமே
என் செய்வேன் ஏழைநான் கூவினேன்.
இது தநிதனில் கதியுமையன்றி வேறில்லையே (தெ)

ஐயனே மெய்யனே துய்யனே
பேதை நான் வாதைபால் வருந்தினேன்
பெருந்துபரது அரைநொடிதனில் வந்துற்றதே. (தெ)

புருஷனே நம்பியே அரசனே
கைவிட்டேன் நான் கெட்டேன் பதிவிட்டேன்
கருநாகமது இவருயிர்தனை வாங்கியதே. (தெ)

சிந்தை நான் நொந்துமே வெந்தேனே
சுந்தரா பரந்தரா வரந்தாராய்
சிவராமலிங்கம் பதம்பாடியுனைப் பணிந்துநின்றேன். (தெ)

---

ஆஹா என்ன செய்யப்போகிறேன். நாமொன்று நினைக்கத் தெய்வமொ ன்று நினைத்ததே. இப்பொழுது இருதலைக் கொள்ளியாய் விட்டேனே ஏ ஜெகதீசா.

இராகம். விருத்தம். கானடா.

ம. அன்னையும் பிதாவிழந்தே னருமையா மகனிழந்தேன்
தன்னிலை யறிந்திடாமல் சதிசெய்த து ...வால் நொந்தேன்
இன்னலைக் கொண்ட நாதன் இறையவன் அருளினாலே
முன்னதாய் வந்தோர் நாகம் மூட்டியே சென்றதையா.

ம. முதலில் ...னைப்பெற்றோரை இழந்தேன். அதன் பின்னர் இவருவ... ன்பத்தை வினவியதால் புத்திரனை இழந்து புலிகள் ... இந்தவனத்தில் வந்து பரதவிக்கிறேன்.

இந்த இடத்திலேயே இருந்தால் யாராவதுவந்து கண்டுபிடித்துக்கொள்ளுவார்கள் ஆனதால் இந்த சந்நியாசிக்கோலத்துடனே வேறு நகருக்குச்சென்று என் காலத்தைகழிக்க வேண்டியதுதான் எல்லாம் வல்லவன் செயல்.

### வெண்பா

அவையஞ்சி மெய்விதிர்ப்பார் கல்வியும், கல்லார்
அவையஞ்சா ஆகுலச்சொல்லும்--நவையஞ்சி
ஈத்துண்ணார் செல்வமும் நல்கூர்ந்தார் இன்னலமும்,
பூத்தலிற் பூவாமை நன்று.

என்றபடி எல்லாமிருந்தும் பயனில்லாமல் போய்விட்டது. ஏ ஜெகதீசா நீயே கதி.

---

## மனோஹரி பிச்சை எடுக்கிறாள்.

மனோஹரி முதற்பாகம்

சம்பூர்ணம்.

223273